தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1984 மார்ச் 9.

(மாசி 26, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு-2015.)

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Increments for Lecturers.

* 75. *Q.*—Thiru K. ARUNACHALAM (on behalf of Thiru P. R. Thomas): Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that increments for Lecturers in Government Colleges, who possess Second Class Master's Degree, were stopped after five increments, as per G.O. Ms. No. 2107, Education, dated 21st September 1977;

(*b*) if so, whether it is also a fact that this order was amended by the Government, on representation by the Director of Collegiate Education and is applied to existing staff serving in Arts and Science Colleges; and

(*c*) if so, whether there is any proposal to extend the amended order to Aided Engineering College staff also?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது.

புள்ளமங்கலம் அரசினர் உயர்நிலைப்பள்ளி

* 76 வினா.—திரு. க. அருணாசலம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டிணம் கல்வி மாவட்டத்தில் 1977 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட புள்ளமங்கலம் அரசினர் உயர்நிலைப்